செ.வெ.எண்: 478 நாள்: 25/07/2011

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (25.07.2011) தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மணிகண்டம் ஒன்றியம், நாவலூர் குட்டப்பட்டு என்ற இடத்தில் உள்ள புதிய மகளிர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை துவக்கி வைத்தார்கள். மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள விவசாயிகள் பயிற்சி மையங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், ஆய்வுக் கூடம், தொழில்நுட்ப அறிவு மையம், மகளிர் விடுதி ஆகியவற்றிற்கான புதிய கட்டடங்களைக் காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) திறந்து வைத்ததோடு, பணியாளர்கள் குடியிருப்புகள், அலுவலகக் கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், எரிசக்தி பயிற்சிக் கூடம், அச்சுக் கூடம் விரிவாக்கம், விதை சேமிப்பு கிடங்கு ஆகிய புதிய கட்டடங்களுக்கு காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) அடிக்கல் நாட்டினார்கள்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில் 19.6.2011 அன்று நடைபெற்ற அரசு விழாவில் உரையாற்றிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வேளாண் துறை வளர்ச்சி அடைந்தால் தான், வேளாண் பெருமக்கள் வாழ்க்கைத் தரம் உயரும் என்றும், எனவே, தனது தலைமையிலான அரசு, வேளாண் உற்பத்திக்கு மிக முக்கியத்துவம் அளிக்க முடிவெடுத்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்றும், தோட்டக்கலை வணிக நோக்கமாக மாற்றப்படுவதன் மூலம், விவசாயிகளின் வருவாய் அதிகரிக்கும் என்றும் தெரிவித்திருந்தார்கள்.

தோட்டக்கலை மேம்பாட்டிற்கு, தோட்டக்கலை பயின்ற பட்டதாரிகள் மிகவும் இன்றியமையாதவர்கள் ஆவர் என்றும் தற்போது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், இரண்டு தோட்டக்கலைக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன என்றும், இதன் மூலம் 190 பேர் வருடந்தோறும் தோட்டக்கலையில் பட்டம் பெறுகின்றனர் என்றும், எதிர்காலத்தில், தோட்டக்கலை வல்லுநர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு, புதிய தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஒன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ், ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணிகண்டம் ஒன்றியம், நாவலூர் குட்டப்பட்டு என்ற இடத்தில் தற்போதுள்ள வேளாண்மைக் கல்லூரிக்கு அருகில் ஏற்படுத்தப்படும் என்றும் தெரிவித்திருந்தார்கள்.

மேலும், அங்கு ஏற்படுத்தப்படும் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மகளிருக்காகவே ஏற்படுத்தப்படும் என்றும், இந்தக் கல்லூரியில், 40 மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும், முதலாம் ஆண்டில், 10 கோடி ரூபாய் இதற்காக ஒப்பளிப்பு செய்யப்படும் என்றும் தெரிவித்திருந்ததோடு, அக்கல்லூரிக்கான நிர்வாகக் கட்டடம், (முதல்வர் அலுவலகம் மற்றும் துறைத் தலைவர் அலுவலகங்கள்), ஆய்வுக்கூடங்கள், விரிவாக்க அரங்கம், 100 நபர்கள் கொள்ளளவு உடைய தேர்வு மற்றும் கூட்ட அரங்கம், நூலக அரங்கம் (நூலகம் மற்றும் கணினி மையத்துடன்), சமையல் அறை, உணவு அறை மற்றும் கேளிக்கை அரங்குடன் கூடிய விடுதி, பணியாளர் குடியிருப்பு ஆகிய புதிய கட்டடங்களுக்கும் அடிக்கல் நாட்டினார்கள்.

இதன் தொடர்ச்சியாக, திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் புதிய மகளிர் தோட்டக் கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை இன்று (25.7.2011) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக 'முதலமைச்சர் அவர்கள் மகளிர் தோட்டக் கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை துவக்கி வைத்ததை தொடர்ந்து, அக்கல்லூரியில் பயிலும் மாணவி செல்வி கவிநிலவு நன்றி தெரிவித்து பேசியதாவது:- "மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த வணக்கம். அம்மா எனது பெயர் கவிநிலவு. நான் அரும்பாவூர் கிராமத்திலிருந்து இங்கு வந்து சேர்ந்துள்ளேன். எனக்கு தோட்டக்கலை படிப்பு படிக்க வேண்டும் என்று ஆசை. என் பெற்றோரிடம் சொன்ன போது, அவர்கள் என்னை பெரியகுளம் வரை என்னை படிக்க அனுப்பி வைக்க முடியாது என்று கூறிவிட்டார்கள். அந்த சமயத்தில் நீங்கள் ஸ்ரீரங்கம் தொகுதியில் அமைத்து கொடுத்த இந்த தோட்டக்கலை கல்லூரி எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, மகளிருக்கு மட்டுமே என்று தனியாக அமைத்து கொடுத்தது எனக்கு பாதுகாப்பாக இருக்கிறது. என் பெற்றோர்களுக்கு நிம்மதியாக இருக்கிறது அம்மா. தாங்கள் அமைத்துக் கொடுத்த இந்த தோட்டக்கலை கல்லூரியில் நாங்கள் எல்லாம் நன்றாக படித்து இத்தொகுதி விவசாயிகளுக்கு எங்களால் முடிந்த உதவிகளை அளிக்கிறோம் அம்மா. மேலும் இந்த தொகுதியினுடைய பசுமைப்புரட்சிக்கு எங்களால் முடிந்த அளவிற்கு பாடுபட்டு உயர்த்துவோம் அம்மா. மேலும் பெண்களுடையே முன்னேற்றத்திற்காக உழைக்கின்ற அம்மா அவர்களுக்கு கோடான கோடி நன்றிகளை சமர்ப்பிக்கின்றேன் அம்மா. மேலும் எங்களின் கல்லூரியின் சார்பாகவும், மாணவிகளின் சார்பாகவும் நன்றிகளை பறைசாற்றுகின்றேன் அம்மா. நன்றி அம்மா."

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றியதாவது:- "அனைவருக்கும் வணக்கம். ஸ்ரீரங்கம் தொகுதியில் பெண்களுக்கென்றே தோட்டக் கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க கடந்த மாதம் 19ஆம் தேதி அடிக்கல் என்னால் நாட்டப்பட்டது. இன்று பெண்களுக்கான இந்த தோட்டக்கலை கல்லூரியையும், இந்நிலையத்தையும் துவக்கி வைப்பதில் நான் உள்ளபடியே மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த தோட்டக்கலை கல்லூரியில் பயில உள்ள மாணவியர் அனைவரும் நல்ல முறையில் கல்வி பெற்று அவர்களுடைய எதிர்காலம் சிறப்புடன் அமையவேண்டும் என்று எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் தோட்டக்கலை மேம்பாடு அடைய வேண்டும் என்ற எனது விருப்பத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன். செல்வி கவிநிலவு உள்பட இங்கே பயிலவுள்ள அனைத்து மாணவியரும் மிக நல்ல முறையில் கல்வி கற்று அவர்கள் வாழ்க்கையில் சிறப்பான ஒரு நிலையை அடைய வேண்டும் என்ற எனது நல்வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக் கொண்டு விடைபெற்றுக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்."

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் 3 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டி ம்டிக்கப்பட்ட அருப்புக் கோட்டை விவசாயிகள் பயிற்சி மையத்திற்கு (KVK) நிர்வாக கட்டடம், விவசாயிகள் விடுதி, கோழி மற்றும் ஆடு வளர்ப்பு பற்றிய விளக்கக் கூடம், வம்பன்– புதுக்கோட்டை விவசாயிகள் பயிற்சி மையத்திற்கு (KVK) நிர்வாக கட்டடம், தஞ்சாவூர் திடக்கழிவுகள் மேலாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்கு பணியாளர் குடியிருப்பு மற்றும் அலுவலக கட்டடம், கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் திடக்கழிவுகள் மேலாண்மை மற்றும் மண்புழு உரம் தயாரிப்பு தொழில்நுட்ப விளக்கக் கூடம், விதை ஆய்வுக்கூடத்திற்கு முதல் தளம், சிறு தானிய உற்பத்தி மையத்திற்கு பண்ணை அலுவலகத்துடன் கூடிய கிட்டங்கி, வேப்பந்தட்டை தென்னை ஆராய்ச்சி மையத்திற்கு கிட்டங்கி மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம், கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்கு மகளிர் விடுதி ஆகிய கட்டடங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) திறந்து வைத்தார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் 2 கோடியே 89 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் ஆசிரியர் அல்லாத

பணியாளர்களுக்குக் குடியிருப்பு, கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய காய்கறி பயிர்கள் துறைக்கு அலுவலக கட்டடம், ஆய்வுக்கூடங்கள், எரிசக்தி துறைக்கு இயற்கை வளங்கள் மேலாண்மை அலுவலகக் கட்டடம், எரிசக்தி பயிற்சிக் கூடம், அச்சுக்கூடம் விரிவாக்கம், ஆழியார் நகர் தென்னை ஆராய்ச்சி மையத்தில் விதை சேமிப்பு கிடங்கு, ஏத்தாபூர் மரவள்ளிக்கிழங்கு ஆராய்ச்சி நிலையத்திற்கு பணியாளர் குடியிருப்பு ஆகிய புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றியதாவது:- "அனைவருக்கும் வணக்கம். இன்று தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை திறந்து வைத்தும், கட்டப்படவுள்ள புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டியும், இன்று நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் உள்ளபடியே மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இங்கே உள்ள வசதிகளால் இங்குள்ள மாணவ, மாணவியரும், பணியாளர்களும், விவசாயிகளும், நல்ல முறையில் பயன்பெற்று அவர்கள் எதிர்காலம் சிறப்பாக அமையவேண்டும் என்ற எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக இந்த பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவ, மாணவியர் அனைவருக்கும் மிக ஒளிமயமான எதிர்காலம் அமைய வேண்டும் என்ற எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்."

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், வேளாண்மைத்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் வேளாண்மைத்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள் : 25.7.2011